சுருக்கம்

பொதுப்பணிகள் – இந்து சமய அறநிலையத்துறை – கருணையடிப்படையில் பணிநியமனம் – திரு.சி.மணிவண்ணன், இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி 2–1)த் துறை

**அரசாணை (3ப) எண்.10** **நாள்:22.12.2020**
**சார்வரி, மார்கழி – 7**
**திருவள்ளுவராண்டு–2051**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை(நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1) துறை, நாள்.23.01.2020.
3. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கடித ந.க. எண்.55705 / 2016 / பி3, நாள்.05.02.2020 மற்றும் 28.10.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான ஒருங்கிணைந்த வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கடிதங்களில், அரியலூர், உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட, அரியலூர் சரக ஆய்வராகப் பணியாற்றியபோது திரு.மு.சின்னசாமி 24.09.2015 அன்று காலமானார் எனவும், அன்னாரது மகன் திரு.சி.மணிவண்ணன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பித்ததன் அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 29.05.2017 முற்பகல் முதல் பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார் எனவும், திரு.சி.மணிவண்ணன், மார்ச் 2011–ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவர் பிறந்த தேதி 10.01.1996 எனவும், அன்னாருக்கு பணிநியமனம் வழங்கப்பட்டபோது, வயது மற்றும் கல்வித் தகுதி உள்ளிட்ட அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளார் எனவும், அவர் பணியேற்ற நாளான

..2..

Scanned by CamScanner

29.05.2017 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறும், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சி.மணிவண்ணன் என்பவரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இந்து சமய அறநிலையத்துறையில், அவர் பணியில் சேர்ந்த நாளான 29.05.2017 முற்பகல் முதல் அப்பதவிக்குரிய உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாறு முன்னிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஊதிய உயர்வுகள், நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

6. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.20146/Q1/2020, நாள்.10.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.33494/G2/2020-1, நாள் 15.12.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

விக்ரம் கபூர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
திரு.சி.மணிவண்ணன், இளநிலை உதவியாளர்.
உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி.
(ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை வழியாக)
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.
நகல்:-
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாவட்ட கருவூல அலுவலர், இராமநாதபுரம்.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1)த் துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை–9
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
தேர்வாணையச் சாலை, சென்னை–3.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பெ.நந்தினி
22/12/2020
பிரிவு அலுவலர்

22.12.2020

Scanned by CamScanner

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை–34.

ந.க.எண்.55705/2016/பி.3/ நாள்.05.03.2021

பொருள்: பணிப்பிரிவு – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.சி.மணிவண்ணன்,– இளநிலை உதவியாளர், உதவி ஆணையர் அலுவலகம், பரமக்குடி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டது –தொடர்பாக.

பார்வை: அரசாணை எண்(3ப). 10 சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை நாள். 22.12.2020.

*******

பார்வைக்குறிப்பின் மூலம் பரமக்குடி, உதவி ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.சி.மணிவண்ணன் என்பவருக்கு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யும்பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

2) மேலும், தனியரின் 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் தனியருக்கு சார்பு செய்யும் பொருட்டு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. மேற்படி சான்றிதழ் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைப்பு : 1. மேற்படி அரசாணை நகல்
2. 10–ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்

ஆணையருக்காக

08/03/2021

பெறுநர்

1. உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
பரமக்குடி. (ஒப்புகை பதிவஞ்சல் மூலம்)

2. மிகை.

Scanned by CamScanner